செ.வெ.எண்:26 நாள்:11.10.2021

# அமைப்பு சாரா தொழிலாளர்களின் விவரங்கள் மத்திய அரசின் இணையதளத்தில் பதிவு செய்யலாம் – மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர்,இ.ஆ.ப., தகவல்.

தேசிய அளவில் அமைப்புசாரா தொழிலாளர்களை இலவசமாக பதிவு செய்வதற்காகவும் அவர்களுக்கான சமூக நலத்திட்டங்கள் நேரடியாக சென்றடையும் பொருட்டு மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சகத்தினால் eSHRAM/NDUW என்ற தரவுதளம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலமாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்ட தொழிலாளர்கள், சுய உதவிக்குழு உறுப்பினர்கள், தெருவோர வியாபாரிகள், ரிக்ஷா ஓட்டுநர்கள், கட்டுமான தொழிலாளர்கள், மதிய உணவு பணியாளர்கள், வீட்டு வேலை செய்பவர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், மீன்பிடிப்போர், செங்கல் சூளை பணியாளர்கள் போன்ற அமைப்புசாரா தொழிலில் ஈடுபடும் பணியாளர்கள் இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையலாம்.

கரூர் மாவட்டத்தில் உள்ள 18 வயது முதல் 59 வயதுக்கு உட்பட்ட அமைப்புசாரா தொழிலாளர்கள் பொது சேவை மையங்கள் மூலமாக https://eshram.gov.in என்ற இணையதளத்தின் மூலம் பதிவு செய்து கொள்ளலாம் எனவும் மேற்படி பதிவு செய்யவுள்ள அமைப்புசாரா தொழிலாளர்கள் இ.எஸ்.ஐ. பி.எப்., என்.பி.எஸ். பிடித்தம் செய்யப்படுவர்களாக இல்லாமலும், வருமான வரி செலுத்துபவர்களாக இருக்க கூடாது எனவும் பதிவு செய்ய ஆதார் அட்டை, ஆதார் அட்டையுடன் இணைக்கப்பட்ட செல்போன் எண் அவசியம் எனவும் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா திட்டத்தின் கீழ் ரூ.2.00 லட்சத்திற்கான இலவச மருத்துவ காப்பீடு பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது எனவும் இனிவருங்காலங்களில் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான சமூக நலத்திட்டங்கள் இப்பதிவின் அடிப்படையில் கிடைக்கும் எனவும் இதனை கரூர் மாவட்டத்தில் உள்ள அமைப்புசாரா தொழிலாளர்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் கரூர், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர்,இ.ஆ.ப., அவர்களால் தெரிவிக்கப்படுள்ளது.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்